10வது ஆண்டு நிறைவை நோக்கி வெற்றி நடைபோடும்

# டுறம் தமிழ் ஒன்றியம்

**2000 ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் இலாப நோக்கற்ற தமிழ் கல்வி,கலாச்சார மேம்பாட்டிற்கான ஓர் அமைப்பாகும். இவ் ஒன்றியம் இதுவரை நிகழ்த்திய சாதனைகளின் பட்டியல்:**

- தொடர்ந்து 8 வருடங்களாக டுறம் தமிழ் இளைஞர் விழாக்களைச் சிறப்பாக நடாத்தி எம் இளையோரின் திறன்களை வெளிக்கொணர்ந்தமை. இவ்வருடம் கடந்த 26ம் திகதி நடைபெற்ற நிகழ்வைப் பாதிக்கப்பட்ட நமது தாய்நாட்டின் சிறார்களுக்குச் சமர்ப்பித்தமை.
- சத்திர சிகிச்சையின்போது மயக்க மருந்து கொடுக்கும் சாதனத்தை (Anesthesia Machine) 20,000 டொலர்கள் நிதி சேகரித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்தமை.
- டுறம் இளைஞர்களின் இயல் இசை நாடக அபிவிருத்திக்கு ஆவன செய்தமை.
- இவ்வொன்றிய அங்கத்தவர்களும், இளைஞர்களும், நிர்வாகசபை உறுப்பினர்களும் கனடிய, ஒன்ராரியோ மாகாண, நகரசபை ஆகியவற்றிடமிருந்து ஏராளமான பாராட்டுப்பத்திரங்களை தமது தொண்டர் சேவைகளுக்கும், கல்விச் சிறப்பிற்கும், தொழில் திறனுக்கும் சுவீகரித்தமை. விஷேடமாக பிக்கறிங் நகரசபையினால் டுறம் தமிழ் ஒன்றியத்திற்கு வழங்கப்பட்ட “Cultural Diversity Award” குறிப்பிடத்தக்கது.
- இளையோர் தொண்டர் சேவைகளை ஊக்கிவித்து அவர்களின் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக நோக்கங்களுக்காக உதவியமை.
- டுறம் பிரதேசத்தில் தமிழ் கல்வியைக் கற்பிப்பதற்கு டுறம் பிரதேச கல்விச் சபையுடன் இணைந்து இரண்டு பாடசாலைகளில் தமிழ் வகுப்புகளை உருவாக்கியமை.
- டுறம் பிரதேசத்திலிருந்து பல்கலைக் கழகங்களுக்குச் சென்ற மாணவர்களைக் கௌரவப்படுத்தியமை.
- எமது தமிழ் மண்ணுக்காக பல அகிம்சை ஊர்வலங்களில் பங்கு கொண்டதுடன் கனடிய நாட்டின் அற நிறுவனமான Foundation for Sick kids இன் நடைபவனியில் பங்கு கொண்டு நிதி சேகரித்து வழங்கியமை.
- தமிழுக்கும் தமிழ் இனத்தின் மேம்பாட்டிற்கும் ஒத்துழைப்பு நல்கியமை.
- கனடிய, ஒன்ராரியோ மாகாண, நகரசபை பிரதிநிதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எமது மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்ததுடன், எம் பிறந்த மண்ணின் பிரச்சனைகளை அவர்களுக்கு விளக்கி, பாராளுமன்றங்களுக்கும் நகர சபைகளுக்கும் எம்மவர் அவலங்களை எடுத்துச் செல்ல வைத்தமை.



## எமது எதிர்காலத்திட்டங்கள்:

மேற்குறிப்பிட்ட எம் முயற்சிகள் விரிவடைவதோடு பின்வரும் புதிய முயற்சிகளை மேற்கொள்ள டுறம் தமிழ் ஒன்றியம் திட்டமிட்டுள்ளது:

1. முதியோர் நலம் பேண் முயற்சிகளை நிறுவி அவர்களின் சுமூகமான வாழ்விற்கு உதவி புரிதல்.
2. எதிர்வரும் 2010ம் ஆண்டு பல்கலைக்கழகம் செல்லும் எம் இளையவர்களுக்காக ஒரு புலமைப் பரிசில் திட்டத்தை எமது 10வது நிறைவு ஆண்டில் நிறுவுதல். அங்கத்தவர்களாக இருக்கும் பிள்ளைகளின் கல்வி மற்றும் பல திறன் தேர்வையும், அவர்களது ஒன்றிய சேவைகளையும் கருத்தில் கொண்டு கணிசமான தொகையாக இப்பரிசு வழங்கப்படும்.
3. எம் இளையர்களின் கல்வி, கலை, கலாச்சாரம், உடல் நலம் பேணுதலை முன்நிறுத்தி டுறம் தமிழ் ஒன்றியத்தின் மேற்பார்வையில் கல்விக் கூடங்களையும், கலை, கலாச்சார வகுப்புகளையும், கராத்தே போன்ற பயிற்சிகளையும் ஏற்படச் செய்தல்.
4. எம் குழந்தைகளின் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தும் வகையில் உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மென்பந்தாட்டம் போன்றவற்றிற்காகக் குழுக்களை அமைத்து வெளிநிலைப் போட்டிகளில் ஈடுபடச் செய்தல்.
5. இளைஞர்களுக்கு கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து அவர்களின் அறிவை மேலும் வளர்க்க ஒழுங்குசெய்தல்.
6. முதியோர்களுக்கு பொழுது போக்கு மற்றும் நகர்வல நிகழ்ச்சிகளை உருவாக்கி அவர்களின் இயல்பான வாழ்வினை மேம்படச் செய்தல்
7. மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற டுறம் தமிழ் ஒன்றியத்திற்காக ஒரு நிரந்தர இடமொன்றைப் பெற ஆவன செய்தல்.

**டுறம் வாழ் தமிழ் மக்களே!**

**டுறம் தமிழ் ஒன்றியத்தின் வளர்ச்சி உங்கள் கைகளில் தங்கியுள்ளது.**
**விரைவில் அங்கத்துவம் பெற்று எம்மின எழுச்சியில் பங்கு பெறுங்கள்.**
**மேலதிக விபரங்களுக்கு (905) 428-7007 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

**எமது ஒன்றியம் பற்றி மேலதிக விளக்கம் பெற www.durhamtamils.com என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.**





**எதிர்வரும் அக்டோபர் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு 910 Liverpool Street South இலுள்ள East Shore Community Centre இல் நடைபெறவிருக்கும் இலவச தகவல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்து, 2010ம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் திட்டத்தை அறிந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**